**O.S. 98/2019, 05.10.2021, 11.30 am - 12.00 pm**

**வா.சா.1, E.R.செங்குட்டுவன், த/பெ.லேட்.E.R.தேவராஜன்**

சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

வா.சா.ஆ.1 ஆவணமான சுத்தவிக்கிரைய ஆவணத்தை யார் எழுதியது என்று தெரியுமா என்றால் தெரியும், கல்பனா என்பவர் எழுதினார். கல்பனா என்பவரை எவ்வளவு நாட்களாக எனக்கு தெரியும் என்றால் ஆவணத்தை எழுதும்போது தான் தெரியும் அதற்கு முன்பு தெரியாது. வா.சா.ஆ.1-ல் எத்தனை முத்திரை தாளுடன் எழுதப்பட்டது என்றால் எத்தனை முத்திரை தாள் என்று தெரியாது கையொப்பம் நான் தான் செய்தேன். என்னிடம் ஆவணத்தில் எங்கு கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஆவணம் தயார் செய்த பிறகு பிரதிவாதிகள் வெளியே வந்து என்னிடம் வாங்கினார்கள். ஆவணத்தை பிரதிவாதிகள் படித்து காண்பிக்கவில்லை என்று கூறினீர்கள், ஆவணத்தை பார்த்தேன் ஆனால் படிக்க எனக்கு நேரம் கொடுக்கவில்லை. என்னிடம் ஆவணத்தை மடித்து காண்பித்து வாங்கினார்களா என்றால் ஆமாம், மடித்து காண்பித்து தான் வாங்கினார்கள். எவ்வாறு என்னிடம் மடித்து காண்பித்தார்கள் நீளவாக்கில் மடித்து காண்பித்தார்கள். என்னிடம் ஆவணத்தில் அனைத்து பக்கத்திலும் மற்றும் அந்த ஆவணத்தின் ஒரு தாளில் பின்பக்கத்திலும் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பத்தை சாட்சியிடம் காண்பித்து கேட்டபோது ஆவணத்தை பார்த்து அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் என்று சாட்சியம் அளித்தார். 7 முத்திரை தாளிலும் அதன் தொடர்புடைய முத்திரை அல்லாத தாளிலும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் எண்ணிக்கை நினைவில்லை, ஆனால் அனைத்து கையொப்பமும் நான் தான் செய்தேன். 2016ல் தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. இன்று அதனுடைய மதிப்பு ரூ.10,00,000/- ஆகும். கிரையத்திற்கு முத்திரை தாள் கட்டணம் அதிகம் என்றும், அடமானத்திற்கு முத்திரை தாள் கட்டணம் குறைவு என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அடமானம் போடுவதாக இருந்தால் சொத்தின் மதிப்பிற்கு குறைவான தொகைக்கு தான் அடமானம் போடுவார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணமானது ரூ.65,000/-த்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அன்றைய தேதியில் வா.சா.ஆ.1 ற்கான தாவா சொத்தின் சந்தை மதிப்பு அடிப்படையில் 65,000/-த்திற்கு பதிவு செய்யப்பட்டதால் தான் அது குறைந்த மதிப்புக்கு பதிவு செய்யாமல் சரியான தொகைக்கு பதிவு செய்யப்பட்ட காரணத்தால் தான் சார்பதிவாளர் பிரதிவாதிகளிடம் அந்த ஆவணத்தை ஒப்படைத்தார்கள் என்று சொன்னால் சரிதான், கிரையமாக இருந்தாலும், அடமானமாக இருந்தாலும் ஆவணத்தை பதிவு செயதவர்களிடம் தான் கொடுப்பார்கள், ஆனால் தாவா சொத்து இன்றைய தேதிவரை என்னுடைய சுவாதீனத்தில் தான் உள்ளது. வா.சா.ஆ.1ல் நான் போட்டுள்ள கையொப்பம் இடத்தில் கிரையம் கொடுப்பவர் என்ற இடத்தில் 14 இடங்களிலும் போட்டுள்ளேன் என்று சொன்னால் கையொப்பம் செய்யும்போது நான் அதில் எழுதியுள்ளதை பார்க்கவில்லை. தற்பொழுது தாவா சொத்தின் மதிப்பு அதிகமானதால் கிரையம் கொடுக்கவில்லை, அடமானம் தான்

கொடுத்தேன் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, இன்றைய தேதி வரை நான் வட்டி செலுத்தி வருகிறேன். வட்டி செல்த்தியதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. பிரதிவாதி பைனான்ஸ் நடத்துவதாக கூறுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் நடத்தி வருகிறார். 1ம் பிரதிவாதி வணிகம் செய்பவர், 2ம் பிரதிவாதி ஓய்வுபெற்ற அரசு ஊழியர் என்றும் அவர்கள் எந்தவித பைனான்ஸ் நடத்தவில்லை என்பதால் தான் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போல் ஆவணத்தை மடித்து வாங்கியிருந்தாலும் கிரையம் கொடுப்பவர் என்று நன்றாக தெரிந்த இடத்தில் தான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் நான் பார்க்கவில்லை. ஆவணத்தில் உள்ள சங்கதிகள் தெரியவில்லையா அல்லது கிரையம் கொடுப்பவர் என்று எழுதியுள்ளது தெரியவில்லையா என்றால் எதுவுமே அவசரம் காரணமாக எனக்கு தெரியவில்லை. உயர் மின் அழுத்ததற்கான மரம் அரசாங்கத்தால் வெட்டப்பட்டு இழப்பீடு கொடுத்த தொகையை 2ம் பிரதிவாதிக்கு சேரவேண்டும் என்று கேட்டதன் அடிப்படையில் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனை போட்டு விற்பனை செய்ய முடியாத சமயத்தில் தான் வா.சா.ஆ.1 எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மனைபோடுவதற்காக உரிய அலுவலகத்திற்கு முன்பு தாக்கல் செய்த மனு குறித்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை 2017ல் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் விவசாய நிலங்களை மனை பொடுவதற்கு அப்ருவல் வழங்ககூடாது என்று பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எனக்கு இழப்பீடு கொடுக்கப்பட்டது என்றால் 45, 50 செண்ட் நிலத்திற்கு கொடுத்தார்கள். எவ்வளவு தொகை இழப்பீடு பெற்றேன் என்றால் தோரயமாக ரூ.38,000/- பெற்றேன். தாவா சொத்தை தவிர்த்து மீதமுள்ள 50 செண்டில் என்ன பயிர் செய்து வருகிறேன் என்றால் தென்னை, நெல் பயிர் செய்து வருகிறேன். 2016லிருந்து இன்றைய வருடம் வரை இந்த பகுதியில் மழை இல்லாமல் சரியான பயிர் வளம் இல்லை என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆனால் என்னுடைய கிணற்றிலிருந்து பயன்படுத்தி வந்தேன். தாவா சொத்து தரிசு நிலம் என்றும், அதில் நான் சுவாதீனத்தில் உள்ளேன் என்று குறிப்பிடுவது தவறு என்றும், 2ம்பிரதிவாதி தான் தற்போது வரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் பயிர் செய்து வருவதற்கான வருவாய்துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி எந்த தேதியில் தொல்லை கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பாக வந்து இன்னும் 50,000/- கொடுத்தால் ஆவணத்தை ரத்து செய்து தருவதாக கூறினார்கள். மேற்படி சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு யார் இருந்தார்கள் என்றால் என் பிள்ளைகள் இருந்தார்கள். என்னுடைய பிள்ளைகளுக்கு 25, 23 வயதாகிறது. வழக்கு தாக்கல் செய்த பிறகு எந்த இடையூறும் செய்யவில்லை. அதன் அடிப்படையில் நான் தான் அமைதியான சுவாதீனத்தில் இருந்து வருகிறேன் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேனா என்றால் பிரதிவாதிகள் அதன் பின்னிட்டு எதுவும் பிரச்சனை செய்யாததால் புகார் கொடுக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு போடுவது செலவுக்குரிய செயல் என்றும், காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது செலவு இல்லாத செயல் என்றும், அவ்வாறு தெரிந்து

காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை, அவ்வாறு நான் கூறுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போல்தற்பொழுது தாவா சொத்தின் மதிப்பு அதிகமாக உள்ளதாக நினைத்தது காரணமாக வா.சா.ஆ.1-ஐ ரத்து செய்ய சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் அடமானம் ஆவணம் இல்லை என்றும், வட்டி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும், முழுதொகையை பெற்றுக்கொண்ட ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் வட்டி செலுத்தவில்லை என்றும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அடமான ஆவணத்திற்கு சொத்திற்குரிய வழிகாட்டி மதிப்பு முழுதொகையும் செலுத் வேண்டிய அவசியம் இல்லை என்றும், வா.சா.ஆ.1 ஆவணமானது கிரையம் ஆவணம் தான் என்று சொன்னால் சரியல்ல. உரிய முத்திரை தாள் கட்டணத்தை பெற்றுக்கொண்டு, உரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் அனைத்தும் சரிபார்த்த பிறகு தான் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டதால் அந்த ஆவணத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>** இல்லை.